**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | | | |
|---|---|---|---|
| Case No: | | SC.No. 134/2025 | |
| Prosecution Witness: | | PW- /LW- | |
| Name: | திரு. கலைவாணன் | Taluk: | உடையார்பாளையம் |
| S/o. | திரு. செல்வேந்திரன் | Age: | 35 |
| Occupation: | தலைமைக்காவலர் | Village: | கழுவந்தோண்டி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **20.07.2026 By Thiru.R.Mohan, Grade I Bench Clerk**

(எதிரி முன்னிலையானார்.)

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது ஆண்டிமடம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு குவாகம் காவல் நிலையத்தில் முதல்நிலைகாவலராக பணியில் இருந்தபோது **10.10.2023** ம் தேதி காலை **11.00** மணியளவில் அரசால் தடைச்செய்யப்பட்ட போதைக்பொருளான ஹான்ஸ் பாக்கெட்டை அசாவீரன் குடிக்காடு கிராமத்தை சேர்ந்த ஆஜர் எதிரியான தேவேந்திரன் என்பவர் தனது கடையில் விற்பதாக தகவல் கிடைத்தது. உடனே சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் புண்ணியகோடி மற்றும் முதல்நிலை காவலர் **731** இளவரசன் ஆகியோருடன் சேர்ந்து நானும்

சேர்ந்து சாதாரண உடையில் சென்று கடையினை நோட்டம் விட்டோம், அப்போது நாங்கள் சாதாரண உடையில் சென்று இருந்தோம். சிறப்பு உதவி ஆய்வாளர் புண்ணியகோடி என்பவர் ஹான்ஸ் பாக்கெட் வாங்கி வந்த ஒருவரை மறித்து எங்கிருந்து ஹான்ஸ் வாங்கி வருகிறாய் என்று விசாரித்தபோது அவர் ஆஜர் எதிரியின் கடையில் இருந்து ஹான்ஸ் வாங்கி வருவதாக சொன்னார். அவர் அவரது கடை மாரியம்மன் கோவிலுக்கு பின்னால் இருப்பதாகவும் சொன்னார். உடனே நாங்கள் சென்று அந்த கடையில் சோதனை போட்டோம். அப்போது அந்த கடையில் 7 பாக்கெட் ஹான்ஸ் இருந்து கைப்பற்றினோம். அதன்பிறகு ஆஜர் எதிரி சோதனைக்கு பின் ஹான்ஸ் பாக்கெட் விற்பனை செய்ததை ஒப்புக்கொண்டார். அதன்பிறகுபொதுமக்கள் யாரும் சாட்சி சொல்ல யாரும் முன்வராததால், எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றுதல் மகஜரில் ஹான்ஸ் பாக்கெட்டுகளை கைப்பற்றினார். அதில் நானும், 731 இளவரசன் என்பவரும் கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ–1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.** அதன்பிறகு எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்து வழக்கு பதிவு செய்தார். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இரகசிய தகவல் எதன் மூலம் வந்தது என்றால் கைபேசி மூலம் சிறப்பு உதவி ஆய்வாளர் புண்ணியகோடிக்கு தகவல் வந்தது. இரகசிய தகவல் வந்ததாக சொல்லப்படும் நேரத்தில் எந்த ஊரில் இருந்தீர்கள் என்றால் குவாகம் காவல் நிலையத்தில் இருந்தேன். எத்தனை மணியில் இருந்து எத்தனை மணி வரை காவல் நிலையத்தில் பணியில் நான் இருந்தேன்

என்றால் பணியில் காலை 8.00 மணி முதல் மாலை 06.00 வரை இருந்தேன். நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் இடத்திற்கு காலை 11.00 மணிக்கு சென்றேன். நாங்கள் வழக்கமாக கையில் அன்றாடம் பணிபுரியும் பதிவுகளை குறித்து வைக்கும் குறிப்பேடு வைத்திருப்போம் என்றால் சரிதான். மேற்சொன்ன குறிப்பேட்டை இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நாங்கள் கைப்பற்றியதாக சொல்லப்படும் பொருட்களை ஆஜர் எதிரி தயார் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் கைப்பற்றியதாக சொல்லப்படும் பொருட்கள் வெளியில் கிடைக்ககூடிய பொருட்கள் என்றால் கிடைக்காது, எதிரியின் கடையில் வைத்து விற்பனை செய்ததால் நாங்கள் அங்கு சென்று பிடித்தோம். சிறப்பு உதவி ஆய்வாளர் புண்ணியகோடி கேட்டுக்கொண்டதின் பேரில்தான் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை, ஹான்ஸ் எடுக்கும்போது நான் அருகில் இருந்து பார்த்தேன் அதனால் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தேன். அதேபோல் அசாவீரன் குடிக்காட்டில் எத்தனை வழக்கு பதிவு செய்தோம் என்றால் 4 வழக்குகள் பதிவு செய்தோம். மேற்சொன்ன 4 வழக்குகளையும் கைப்பற்றதல் மகஜரில் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை, 2 வழக்குகளில் மட்டும்தான் கையொப்பம் செய்தேன். அன்றைய தினம் எங்கள் காவல் நிலைய எல்லைக்குள் எத்தனை வழக்குகளை பதிவு செய்தோம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதேபோல் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கடைக்கு எதிரே மாரியம்மன் கோவில் உள்ளது என்றும், அங்கு பொது மக்கள் சுமார் 10, 20 பேர்கள் இருந்திருப்பார்கள் என்றாலும் சரிதான். அன்றைய தினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து வந்த குறிப்பின்படி

எங்கள் காவல் நிலைய எல்லையிலும் மாவட்ட முழுவதும் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இடத்தில் நான் இல்லை என்றும், எனது மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதின் பேரில் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே சம்பவ இடத்தில் இருந்தே கைப்பற்றியிருந்தால் பொதுமக்கள் யாரையாவது சாட்சியாக சேர்த்திருப்பீர்கள் என்றும், அவ்வாறு இல்லாததால்தான் அவர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, பொதுமக்கள் சாட்சியாக இருக்க முன்வரவில்லை. நாங்கள் யார்யாரிடம் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்ய கேட்டோம் என்ற விபரத்தை கைப்பற்றுதல் மகஜரிலும், வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. வழக்குமாக இதுபோன்ற வழக்குகளை சுகாதாரத்துறை மற்றும் உணவு பாதுக்காப்பு துறையினர் ஆய்வு செய்து அவர்கள் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்வதுதான் வழக்கம் என்றால் சரிதான். காவல் துறையின் உத்தரவின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றும், புள்ளி விபரக்கணக்கிற்காக எதிரி மீது பொய்யான வழக்கு போட்டுள்ளோம் என்றாலும் சரியல்ல. மேற்படி வழக்கு புள்ளி விபர கணக்கிற்காக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் பொருட்களை கைப்பற்றவில்லை என்றும், நாங்களாக வழக்கிற்காக தயார் செய்து சான்றுப்பொருட்களை இவ்வழக்கில் சேர்த்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**